Will L. Thompson, 1847-1909



பாமாலை 492 இன்ப நல் மெல்லிய

1 இன்ப நல் மெல்லிய சத்தத்தால் இயேசு
நம்மை அழைக்கின்றாரே
உன்னை என்னை நோக்கி பார்க்கும் நல் தேவன்
காத்திருக்கின்றார் இதோ

பல்லவி

நீ வா என்னண்டை வா!
சோர்வுற்ற நீயும் என்னண்டை வா
பாவியாம் நம்மையும் பரிந்தழைத்தே,
தம்மண்டை அழைக்கிறார்

2 ஏன் இந்த தாமதம் நல் அழைப்பிற்கு?
வருந்தி அழைக்கின்றாரே
அவர் இரக்கமும் கிருபையும் பாரேன்,
யாவும் உனக்காய் தானே

3 காலம் கடக்குது, வாழ் நாள் சொல்லுது
உனக்கும் எனக்குமே
மரணம் வரலாம் எந்நேரத்திலும்,
வா அவரிடம் இன்றே!

4 ஒப்பில்லா தெய்வீக அன்பை ஈந்தாரே,
நமக்காய் ஈந்திட்டாரே
பாவத்தால் துக்கித்து வீழ்ந்திருந்தாலும்
அன்பாய் மன்னிக்கின்றாரே!